இசைந்துள்ளனர். மேற்கொண்டு ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் நடவடிக்கையை உடனடியாகச் செய்ய வேண்டாம் என்றும் இன்றைக்கு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் நகருக்கு நேரில் சென்று, திருப்பத்தூர் துணை ஆட்சியருடன் கலந்து பேசி, நிலைமையைத் தெரிந்துகொண்டிருக்கிறார்.

[முற்பகல் 10.10]

தகாத சம்பவம் எதுவும் நிகழவில்லை. அங்கு தற்சமயம் முழு அமைதி நிலவி வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அறிக்கை வந்திருக்கின்றது. வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திருப்பத்தூரில் நகரில் ஏற்பட்ட பதட்ட நிலை முற்றிலும் மாறி அசம்பாவிதமான நிகழ்ச்சி எதுவும் இன்றி அமைதியாக நிலைமை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. அறிவிப்பு.

(அ) நிதியமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்பு திரு. இரெ. இராசமாணிக்கம், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மேலவையில் பதிலளிக்க வேண்டி இருப்பதால் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

வேதாரண்யம் பகுதியில் காலரா நோய்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேதாரண்யம் பகுதியில் காலரா பரவியுள்ளதால் சிலர் இறந்தது குறித்து திருவாளர்கள் எம். எஸ். மாணிக்கம், என். விஜயபாலன் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.